DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **STC. NO.347/2023**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.1

Defence

Court

Name : ராஜ்குமார்
Father/ Husband Name : சுப்பிரமணியன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

எதிரி ஆஜர்.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 10.03.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் தற்போது கல்லல் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2018ம் வருடம் தாலுகா காவல்நிலையத்தில் பணிபுரிந்தபோது 27.10.2018ம் தேதி சார்பு ஆய்வாளர் மீனாட்சி சுந்தரம் மற்றும் தலைமை காவலர் முத்துராமன் ஆகியோருடன் சிறுவாச்சி பஸ்ஸ்டாப்பில் வாகன தணிக்கை செய்துகொண்டிருந்தபோது எதிரி வண்டியை நிப்பட்டாமல் திரும்பி செல்ல முயன்றார். அவரை விசாரித்தபோது அவரிடம் 28 பாட்டில்கள் மேல் இருந்தது. மேற்படி பாட்டில்கள் திறந்து மூடப்பட்டிருந்தது. அதன் வாசனை வேறு மாதிரி இருந்தது. அதனால் நிலையம் கொண்டுவரப்பட்டது. **(அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அது அ.த.சா.ஆ.1)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. முதல் விசாரணையில் சொன்னதை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். எவ்வளவு நேரம் ரோந்து

பணியில் இருந்தோம் என்றால் சுமார் ஒன்றரை மணி நேரம் இருந்தோம். நான் மதுபாட்டில்களை பார்த்தபோது வாசனை இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அத்தாட்சியில் உள்ள எனது கையெழுத்து தாலுகா காவல்நிலையத்தில் வைத்து சார்பு ஆய்வாளரால் பெறப்பட்டது என்றால் சரிதான். நான்சொன்னதுபோல் எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக சார்பு ஆய்வாளர் பதிவு செய்த வழக்கிற்கு ஆதாரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த மதுபாட்டில்களையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

2. அத்தாட்சியில் குற்ற எண் குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அது தயார் செய்யப்பட்ட இடம் சிறுவாச்சி பஸ்ஸ்டாப் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.